
# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஜூன் 25, 2022

Weekly E-paper ● June 25, 2022

# வெற்றிபெற வேண்டும் யஸ்வந்த் சின்கா !

பொள்ளாச்சி மா. உமாபதி

## கற்றுக் கொள்ள வேண்டும் கர்நாடகம்

தலையங்கம்

## “இந்து” மதமல்ல, அது கூட்டுத் திரட்சி !

நூல் அறிமுகம் - எழில் இளங்கோவன்

# கருஞ்சட்டைத் தமிழர்


ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஜூன் 25, 2022

Weekly E-paper ● June 25, 2022


# வெற்றிபெற வேண்டும் யஸ்வந்த் சின்கா !

**பொள்ளாச்சி மா. உமாபதி**



இந்தியாவில் 15வது குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெற உள்ளது. இதுவரை இருந்த 14 குடியரசுத் தலைவர்களில ஆறு பேர் பார்ப்பனர்கள், மூவர் இஸ்லாமியர், ஒருவர் பார்ப்பனர் அல்லாத முன்னேறிய வகுப்பை சார்ந்த சஞ்சீவ ரெட்டி, ஒருவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த கியானி ஜெயில் சிங், பட்டியல் இனத்தைச் சேர்ந்தவர்கள் இருவர், மகளிர் ஒருவர் திருமதி பிரதீபா பாட்டில்.

முன்னெப்போதும் இல்லாத அளவில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சிகளும் தங்கள் வேட்பாளர்களை அறிவிக்க நீண்ட பரிசீலனைகளை மேற்கொண்டன. ஆளும் கட்சியான பாஜக, பழங்குடி இனத்தைச் சேர்ந்த திரௌபதி முர்மு என்னும் வேட்பாளரைக் களம் இறக்கி உள்ளது. எதிர்க்கட்சிகள் மேனாள் ஒன்றிய அமைச்சர் யஷ்வந்த் சின்கா அவர்களை நிறுத்தி உள்ளன.

குடியரசுத் தலைவர் தேர்தலில் 1969இல் தி.மு.கழகம் ஒரு முக்கிய பாத்திரம் வகித்தது. அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் வி. வி. கிரி அவர்களை வேட்பாளராக நிறுத்தினார். ஆனால் ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சி நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்களை நிறுத்தியது. இயல்பாக ஆளும் கட்சி நிறுத்தும் வேட்பாளர்தான் வெற்றி பெறுவார். ஆனால் அன்றைய தினம் 25 எம்.பி.-க்களை கொண்ட திமுக, ஆளுங்கட்சிக்கு எதிராக நிறுத்தப்பட்ட வேட்பாளரை ஆதரித்து வெற்றி பெறச் செய்தது. அதுமட்டுமல்ல 1983இல் பிரதமர் இந்திரா காந்தி பார்ப்பன சமுதாயத்தைச் சார்ந்த ஆர். வெங்கட்ராமன் அவர்களைக் குடியரசுத் தலைவராகக் களமிறக்க நினைத்தபோது, பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர் குடியரசுத் தலைவராக கியானி ஜெயில் சிங் அவர்களை நிறுத்த வேண்டும் என்று பிரதமரிடம் வேண்டுகோள் வைத்து வென்றவர் அன்றைய தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர். ஆறு முன்னேறிய மற்றும் இஸ்லாமிய குடியரசுத் தலைவர்களுக்கு பின் முதன்முதலாக ஒரு பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் குடியரசுத் தலைவர் ஆனது அப்போதுதான். அதுபோலவே பதினோரு ஆண்கள் தொடர்ந்து வகித்து வந்த குடியரசுத் தலைவர் பதவியை முதன்முதலாக ஒரு பெண்ணை, பிரதீபா பாட்டில் அவர்களைத் தேர்வு செய்யப் பரிந்துரை செய்தவரும் முத்தமிழறிஞர் கலைஞர் தான்.

> **பல்லாயிரம் பழங்குடி மக்கள் வசித்த நிலங்களைக் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு தாரை வார்க்க அரசு முடிவெடுத்தபோது, தங்கள் வாழ்விடங்களைக் காலி செய்ய மாட்டோம் என்று போராடிய பழங்குடி மக்கள் மீது அரசு வன்முறையை கட்டவிழ்த்து விட்டு, அவர்களைச் சுட்டுப் பொசுக்கிய போது அவர்களுக்காக குரல் கொடுக்காமல், தன் பதவியை பாதுகாத்துக் கொள்ள இக்கொடுமைகளை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த வர்தான், இன்று பழங்குடி மக்களின் பிரதிநிதியாக காட்டப்படுகிறார்.**

அந்த வரிசையில் இப்போது முதன்முதலாக ஒரு பழங்குடி இனத்தைச் சார்ந்தவருக்கு அந்த வாய்ப்பு கிட்டியுள்ளது. அவர் பிறந்த இனம் பழங்குடி இனம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அவரைப் பழங்குடி மக்களின் பிரதிநிதி என்பதையும் ஏற்க முடியாது. திரௌபதி முர்மு அவர்கள் ஒடிசா மாநிலத்தைச் சார்ந்தவர், பழங்குடி

தொடர்ச்சி அடுத்த பக்கம்

முன்பக்க தொடர்ச்சி

இனத்தைச் சேர்ந்தவர். மாநில அமைச்சராகவும், ஜார்கண்ட் மாநில ஆளுநராகவும் பதவி வகித்த முன் அனுபவம் உள்ளவர். என்றாலும் அவர் ஜார்கண்ட் மாநில ஆளுநராக இருந்தபோதுதான் பல்லாயிரம் பழங்குடி மக்கள் வசித்த நிலங்களைக் கார்ப்பரேட் நிறுவனங்களுக்குத் தாரை வார்க்க அரசு முடிவெடுத்தது. தங்கள் வாழ்விடங்களைக் காலி செய்ய மாட்டோம் என்று போராடிய பழங்குடி மக்கள் மீது அரசு வன்முறையைக்



**சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்படும் தீர்மானங்களைக் கூட கிடப்பில் போட்டு வைக்கும் தமிழ்நாட்டின் ஆளுநர் ரவிக்கும், ஒன்றிய அரசுக்கும் உரிய கடிவாளம் போட யஸ்வந்த் சின்கா குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படவேண்டும். குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ள நீட் தேர்வு விலக்கு சட்ட மசோதா குடியரசுத் தலைவர் யஷ்வந்த் சின்கா அவர்களால் கையெழுத்திடப்பட்டு சட்ட வடிவம் பெற வேண்டும் என்பதே தமிழர்களாகிய நம்முடைய எதிர்பார்ப்பு.**

கட்டவிழ்த்து விட்டு, அவர்களைச் சுட்டுப் பொசுக்கிய போது அவர்களுக்காக குரல் கொடுக்காமல், தன் பதவியைப் பாதுகாத்துக் கொள்ள இக்கொடுமைகளை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த வர்தான், இன்று பழங்குடி மக்களின் பிரதிநிதியாகக் காட்டப்படுகிறார். இது எந்த விதத்தில் நியாயம்?

தமிழ்நாட்டைச் சார்ந்த ஸ்டேன் சாமிகள் ஜார்கண்டில் உள்ள பழங்குடியின மக்களின் உரிமைகளுக்காகப் போராடி 30 ஆண்டுகளுக்கும் மேலாக கொடும் சிறையில் தள்ளப்பட்டு அங்கேயே கொல்லப்பட்டபோது இந்தப் பழங்குடி ஆளுநர் துரும்பைக்கூட நகர்த்த வில்லை.

மதவாத இந்துத்துவா சக்திகள் எப்போதும் காட்டிக் கொடுக்கும் சுயநலவாதிகளைத்தான் உச்சி முகந்து பாராட்டும். தந்தையை காட்டிக் கொடுத்த பிரகலாதன்தான் அவர்களுக்குப் போற்றத்தக்கவன். உடன் பிறந்தவர்களைக் காட்டிக் கொடுத்த விபீஷணனுக்கு தான் ஆழ்வார் பட்டம். அந்த வகையில் தன் இன மக்களுக்குத் துரோகம் செய்த திரௌபதி முர்முவை குடியரசுத் தலைவர் வேட்பாளர் ஆக்கியுள்ளனர்.

காங்கிரஸ் கட்சி பட்டியல் இனத்தைச் சேர்ந்த பேரறிஞர் கே. ஆர். நாராயணன் அவர்களைக் குடியரசுத் தலைவர் ஆக்கியது. அதே சமயம் அதே இனத்தைச் சேர்ந்த ராம்நாத் கோவிந்த் அவர்களை பாஜக குடியரசுத் தலைவர் ஆக்கியது. அதனால் பட்டியலின மக்கள் பெற்ற நன்மை என்ன? குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், பூரி ஜெகநாதர் கோயிலுக்குச் சென்றபோது அங்கு பார்ப்பனப் புரோகிதர்கள் ஒரு பட்டியல் இனத்தைச் சார்ந்தவர் கோவிலுக்குள் வந்ததால் அது தீட்டுப் பட்டதாகச் சொல்லி அந்த இடத்தைக் கழுவி விட்டனர்.இது தீண்டாமைச் சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றம். அதை மதவாத பாஜக அரசு வேடிக்கை பார்த்தது.

குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா மூவருக்கும் கொடுக்கப்பட்ட ஒரு வரவேற்பில் மோடியும் அமித் ஷாவும் சிவப்புக் கம்பள வரவேற்பைப் பெறுகின்றனர். பட்டியல் இனத்தைச் சார்ந்த குடியரசுத் தலைவரை ஓரத்தில் நடக்க வைத்து ஓரவஞ்சனை செய்தது இந்த பாஜக அரசுதான்.

எதிர்க்கட்சிகளின் வேட்பாளரான யஸ்வந்த் சின்கா ஒரு ஆர்எஸ்எஸ் வார்ப்புதான் என்றாலும் ஆர்எஸ்எஸ்-ஐயும், பாஜகவையும் அவற்றின் மதவாதப் போக்குகளையும் வெறுத்து வெளியேறி வந்தவர் அவர். ஆர்எஸ்எஸ்-இன் பாஜகவை உள்ளும் புறமும் முற்றும் அறிந்தவர். இன்று திரிணாமுல் காங்கிரஸ் கட்சியில் இருக்கின்றார். மூத்தவர், முதிர்ந்தவர்.

இன்றைக்கு உள்ள நிலையில் எதிர்க்கட்சிகளின் வேட்பாளரான யஸ்வந்த் சின்கா வெற்றி பெற்றால்தான் இந்தியாவின் ஜனநாயகம் தழைக்கும். எதேச்சதிகார பாஜக அரசுக்குச் சரியான கடிவாளம் போட வேண்டும் என்றால் அதற்கு யஸ்வந்த் சின்கா வென்றாக வேண்டும். தமிழ்நாடு அமைச்சரவையில் சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்படும் தீர்மானங்களைக் கூட கிடப்பில் போட்டு வைக்கும் தமிழ்நாட்டின் ஆளுநர் ரவிக்கும், ஒன்றிய அரசுக்கும் உரிய கடிவாளம் போட யஸ்வந்த் சின்கா குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படவேண்டும். குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ள நீட் தேர்வு விலக்கு சட்ட மசோதா குடியரசுத் தலைவர் யஷ்வந்த் சின்கா அவர்களால் கையெழுத்திடப்பட்டு சட்ட வடிவம் பெற வேண்டும் என்பதே தமிழர்களாகிய நம்முடைய எதிர்பார்ப்பு.

வெல்லட்டும் யஸ்வந்த் சின்கா.

கருஞ்சட்டைப் பதிப்பகம்

இணையத்தள விற்பனை (online sales)

கருஞ்சட்டைப் பதிப்பக வெளியீடுகளும், தோழர் சுபவீ, பேராசிரியர் அருணன் ஆகியோர் எழுதியுள்ள பிற நூல்களும் இப்போது இணையத்தள விற்பனையில் உள்ளன. இந்தியாவின் எந்தப் பகுதியிலிருந்தும் நூல்களை இணைய வழியில் அனைவரும் பெற்றுக்கொள்ளலாம். வங்கி அட்டைகள் மூலமோ, அல்லது வீட்டிற்குப் புத்தகம் வரும்போது பணம் செலுத்தியோ நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இணையத்தள முகவரி : karunchattaibooks.com

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

# கருஞ்சட்டைத் தமிழர்

## கற்றுக் கொள்ள வேண்டும் கர்நாடகம்



கடந்த 19-06-2022 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள், கேரள முதலமைச்சர் பினராய் விஜயன் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தார்.

கோவை மாநகராட்சிக்கான மொத்த நீர்த் தேவை 265 மில்லியன் லிட்டர். சிறுவாணி அணையில் இருந்து 1.30 டி.எம்.சி குடிநீர் வழங்க தமிழக அரசும், கேரள அரசும் ஏற்கனவே ஒப்பந்தம் செய்துள்ளன.

ஆனாலும் கடந்த சில ஆண்டுகளில் கேரள அரசு 0.484 டி.எம்.சியில் இருந்து 1.128 டி.எம்.சி அளவுக்குத்தான் நீர் வழங்குகிறது.

காரணம் கேரள நீர்ப்பாசனத்துறை சிறுவாணி அணையின் முழு நீர் தேக்க மட்டம் 878.50 மீட்டர் வரை நீரைத் தேக்காமல் குறைவாகத் தேக்கி வருகிறது.

இதனைச் சுட்டிக்காட்டி 878.50 மீட்டர் வரை நீரைத் தேக்கத் தமிழ் நாடு முதல்வரின் வேண்டுகோளை ஏற்று அணையின் நீர்மட்டத்தை உயர்த்த அதிகாரிகளுக்கு ஆணையிட்டார். அது மட்டுமன்று. சிறுவாணி அணை குறித்துப் பேச கேரள முதல்வர் வைத்த வேண்டுகோளைத் தமிழக முதல்வர் ஏற்றுக் கொண்டார்.

இரு மாநில நதி நீர்ப் பிரச்சனையை எப்படிச் சரி செய்ய வேண்டும், எப்படிப்பட்ட அணுகுமுறை இருக்க வேண்டும் என்பதற்கு இந்த முதல்வர்கள் முன்னுதாரணமாக இருக்கிறார்கள்.

அண்டை மாநிலமான கர்நாடகம் பொறுப்பற்று, அணை கட்டுவோம், இவ்வளவுதான் நீர் கொடுப்போம், என்று வீம்பு பிடித்துக் கொண்டிருக்கக் கூடாது.

சிறுவாணி குறித்து, தமிழக முதல்வர், கேரள முதல்வர்களிடம் இருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும், கர்நாடகம்.

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408

## திண்டுக்கல் பொறுப்பாளர்கள் நியமனம்

திண்டுக்கல் மாவட்டப்பேரவை நிர்வாக வசதிக்காகத் திண்டுக்கல் மேற்கு மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு மாவட்டம் என பிரிக்கப்படுகிறது.

அ) திண்டுக்கல் மேற்கு மாவட்டப் பொறுப்பாளர்கள்:

**திராவிட அசுரன்,** மாவட்டத் தலைவர்.
**விடுதலை,** மாவட்டச் செயலாளர்.
**ஜெயச்சந்திரன்,** மாவட்டப்பொருளாளர்.

இம்மாவட்ட ஒன்றியங்கள்.

1.பழனி
2.தொப்பம்பட்டி
3.ஒட்டன்சத்திரம்
4.ரெட்டியார்சத்திரம்
5.வேடசந்தூர்
6. வடமதுரை
7. குஜிலியம்பாறை.

ஆ) திண்டுக்கல் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர்கள்:

**தமிழினியன்,** மாவட்டத் தலைவர்.
**கு.ஆனந்ராஜ்,** மாவட்டச் செயலாளர்.
**வெ.நடராஜன்,** மாவட்டப்பொருளாளர்.

இம்மாவட்ட ஒன்றியங்கள்.

1.திண்டுக்கல்
2.சாணார்பட்டி
3. நத்தம்
4. நிலக்கோட்டை
5. ஆத்தூர்
6.வத்தலக்குண்டு
7. கொடைக்கானல்

**சுப.வீரபாண்டியன்,**
பொதுச் செயலாளர்,
திராவிட இயக்கத் தமிழர் பேரவை.

## திராவிட நட்புக் கழகம்
## அயல்நாடுகளில் பொறுப்பாளர்கள் நியமனம்

உலக நாடுகளில் இருந்து திராவிட நட்புக் கழகத்தில் தம்மை இணைத்துக் கொண்டு பணியாற்ற வருகின்றவர்களை முறைப்படுத்திடும் வகையில் கீழக்கண்ட நாடுகளின் பொறுப்பாளர்கள் நியமிக்கப் படுகின்றனர்.

1) சிக்கந்தர் ஷெரிப் (வளைகுடா நாடுகள்) சவுதி.
+966551841027

2) ராதிகா (ஆஸ்திரேலியா) மெல்பர்ன்.
+ 61402816828

3) நெடுஞ்சுடர் (மலேசியா) கோலாலம்பூர்.
+ 60169870809

4)இரத்தினம்அன்பழகன் (ஐரோப்பிய நாடுகள்) கிழக்கு லண்டன்.
+447931463952


5) வினோப்பிரியா (அமெரிக்கா, கனடா) சிகாகோ
+12242796063

**சுப.வீரபாண்டியன்.**
( பொதுச் செயலாளர்)

# "இந்து" மதமல்ல, அது கூட்டுத் திரட்சி !

நூல் அறிமுகம்

எழில்.இளங்கோவன்




"வைதீகபுரியினரின் ஆதிக்கத்திற்கு அடிபணிய வேண்டிய மக்கள் தொகையைப் பெருக்கிக் காட்ட 'இந்து' என்னும் இந்தப் பெயரே துணையாயிற்று என்பது வரலாறு" என்று சொல்கிறார் பேராசிரியர் க.அன்பழகனார்.

இங்கே 'இந்து' என்ற சொல் கவனம் பெறுகிறது. இந்து என்றால் என்ன? இந்துக்கள் என்பார் யார்? அது குறித்த சரியான விளக்கம் தேவைப்படுகிறது.

அந்த விளக்கத்தை அறிவார்ந்து, உரிய சான்றுகளுடன் சிந்தனைச் செல்வர் கு.ச. ஆனந்தன் அவர்கள் " திராவிட இயக்கங்களின் பார்வையில் இந்து சமயம் " என்ற நூலில் தந்திருக்கிறார்.

1955 ஆம் ஆண்டு தொகுக்கப்பட்ட "இந்து திருமணச் சட்டம்" – "இந்து வாரிசுரிமைச் சட்டம்" – " இந்து இளவர் மற்றும் காப்புரிமைச் சட்டம்" – " இந்து தத்தெடுப்பு மற்றும் வாழ்க்கைப் பணச் சட்டம்" இச்சட்டங்களில் இந்து என்பவர் யார் என்பதற்கு ஒரேவகை, மறைநிலை விளக்கம் தந்திருப்பதாக நூலாசிரியர் கூறுகிறர்.

இச்சட்டத்தின் வழியாக, சமயத்தால் இந்து என்பவருக்கும், அச்சமயத்தின் பல வடிவங்கள் அல்லது நிலைக்கூறுகளைச் சார்ந்த ஒருவருக்கும், வீரசைவம், லிங்காயத்து, பிரம்ம சமாஜம், பிரார்த்தனை அல்லது ஆரிய சமாஜம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றைச் சார்ந்தவருக்கும் (Section 2 (i) (a) – Hindu Marriage Act, 1955), புத்தம், சமணம், சீக்கிய மதத்தைச் சார்ந்த ஒருவருக்கும், இந்து என்பது பொருந்தும் என்று (Section 2 (i) (b) சொல்கின்ற ஆசிரியர், இஸ்லாமியர், கிறித்தவர், பார்சி, யூதர் என்றிருந்தால் அவருக்கு இச்சட்டம் பொருந்தாது (Section 2 (i) (c) என்று சட்டச் சான்றுகளுடன் விளக்கம் தருகிறார் கு.ச. ஆனந்தன்.

இந்தச் சான்றுகளில் எங்கும் இந்து என்பதற்கு நேரடியான விளக்கம் சொல்லப்படவில்லை.

"இந்து சமயம் என்றால் என்ன? அதனை நிறுவியவர் யார்? அச்சமயத்திற்கு உரிய நூல்கள் எவை? அதற்கென்று ஒரே சமயத் தலைவர் உண்டா? அவர் கொள்கை எவை? இதுவரை இவ்வினாக்களுக்கு உரிய சரியான விடையை யாரும் தரவில்லை"

"ஏனெனில் இந்து சமயம் என்பது மதமேயல்ல. பல சமயங்களின், சமய உணர்வுகளின், வழிபாட்டு மரபுகளின் கூட்டுத் திரட்சியே | இந்து மதம் எனப் பொருள் புரியாமல் அழைக்கின்றனர் " எனக் கேள்வியும், பதிலுமாக விளக்கம் தருகிறார் இந்நூலில், நூலாசிரியர் கு.ச. ஆனந்தன்.

புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் அவர்கள், "இந்து சமூகம் என்ற வார்த்தைக்கே பொருளில்லை, அது வெறும் கற்பனைதான். இந்து சமூகம் என்பது, உண்மையில் பல சாதிகள் சேர்ந்த ஒரு கதம்பமே ஆகும்" என்று சொல்லியிருப்பது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

சரி, அப்படியானால் 'இந்து' 'இந்து மதம்' என்பது எப்படித் தோன்றியது? சரியாகச் சொன்னால் இந்திய ஒன்றியத்தின் எந்த ஒரு மொழியில் இருந்தும் இப்பெயர் தோன்றவில்லை. வடக்கே சிந்து நதியை அடிப்படையாகக் கொண்டு இப்பெயர் இஸ்லாமியப் பெயர்ச்சொல்லாக உருவான பெயரே, இந்து என்ற பெயர்.

"வெள்ளைக்காரன் நமக்கு இந்துக்கள் என்று பொதுப் பெயர் வைத்தானோ பிழைத்தோம். அவன் வைத்த பெயர் (இந்து) நம்மைக் காப்பாற்றியது " என்று காஞ்சி சங்கராச்சாரியார் அவரின் 'தெய்வத்தின் குரல்' நூலில் சொல்லியிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது.

" வருணாசிரமப் பாதுகாப்புச் சங்கம்" "சனாதன தர்ம சங்கம்" "சனாதனச் சங்கம்" போன்ற இந்து சமய சனாதனச் சங்கங்கள் 1900 – 1920 களில் தமிழ்நாட்டில் பீடு நடை போட்டுச் செயல் பட்டதாகப் பதிவு செய்யும் நூலாசிரியர், இந்து சமயத்தின் சாதிய, வர்ணாசிரமத்திற்கு எதிராகச் "சென்னை மாகாணத் திராவிடர் சங்கம்"– "தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்" என திராவிட இயக்கங்கள் குரல் கொடுக்கத் தொடங்கின என்பதையும் தெளிவாகப் பதிவு செய்துள்ளார்.

"இந்து என்பது சமுதாயப் பெயரா, இனப் பெயரா, மதப் பெயரா, என்பதற்கு யாதொரு விளக்கமும் இல்லை. இந்து என்றால் இந்தியன் என்ற வார்த்தையின் சுருக்கச் சொல் என்பதல்லாமல் அதற்கு வேறு கருத்து எதுவும் இருக்க இடமில்லை. இந்து என்ற சொல்லுக்கு ஆராய்ச்சியாளர்கள் பல பொருள் சொல்கிறார்களே தவிர, அதற்கு மதம் என்ற பொருள் இல்லை...... இந்துக்கள் என்று அழைக்கப்படுகின்ற திராவிட மக்கள், இந்நாட்டின் நலன் கருதியும், பெரும்பாலான மக்களுக்குப் பிறவியின் காரணமாகவே சுமத்தப்பட்ட இழிவு ஒழிக்கப்பட வேண்டும் என்பது கருதியும், முதலாவதாகச் செய்ய வேண்டிய வேலை இந்து மதம் என்ற புரட்டை விளக்கி, மக்களுக்குத் தெளிவை ஏற்படுத்தி அந்தச் சிறையில் இருந்து வெளியேறும்படிச் செய்வதே ஆகும்" என்று அய்யா தந்தை பெரியாரின் ஆவேசத்தைச் சொல்லி, இந்துத்துவத்தின் மீது திராவிட இயக்கங்களின் பார்வையைத் தெளிவுபடுத்துகிறது இந்நூல்.

"திராவிட இயக்கங்களின் பார்வையில் இந்து மதம் என்ற ஆய்வு இனித் தேவையில்லை" எனச் சொல்லி "திராவிட இயக்கங்களின் செயல்பாட்டில் இந்து மதத்தின் நிலை" என்ற சீராய்வுதான் இனி வேண்டும் என்று இந்நூலில் கு.ச. ஆனந்தன் சொல்வதில் நுட்பமான பொருள் பொதிந்துள்ளது என்பதைப் புறம் தள்ளி விட முடியாது!

**திராவிட இந்துக்களின் பார்வையில்**
**இந்து மதம்**

ஆசிரியர் : கு.ச. ஆனந்தன்.
வெளியீடு : தங்கம் பதிப்பகம்
விலை : ரூ. 50
9578004698

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian